# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

## BIOFACH 2027 இயற்கை வர்த்தகக் கண்காட்சியில் இலங்கையின் மண்டபத்தை ஒழுங்கமைத்தல்
## ஜெர்மனி, நியூரம்பேர்க், 2027 பெப்ரவரி 16 தொடக்கம் 19 வரை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) 2027 பெப்ரவரி 16 தொடக்கம் 19 ஆம் திகதி வரை ஜெர்மனி, நியூரம்பேர்க்கில் இடம்பெறும் BioFach 2027 கண்காட்சியில் இலங்கை மண்டபத்தை ஒழுங்கமைக்கிறது.

BioFach 2027 வர்த்தகக் கண்காட்சியானது வர்த்தகம், அறிவு மற்றும் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவத்தை பரிமாறுவதற்காக உற்பத்தியாளர்கள், இயற்கை உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களுக்காக வாய்ப்பு ஒன்றை வழங்கும் உலகின் மிகப்பெரிய இயற்கை வர்த்தக கண்காட்சியாக கருதப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தை பிரதானமாகக் கொண்டு உள்ளூர் நிறுவனங்கள் சான்றளிக்கப்பட்ட இயற்கை உற்பத்திகளை காட்சிப்படுத்துவது மற்றும் ஊக்குவிப்பது மற்றும் சர்வதேச சந்தையில் புதிய போக்குகளை ஆய்வு செய்வதற்கு உளளூர் நிறுவனங்களுக்கு முடிவதே இலங்கையின் மண்டபத்தை ஒழுங்கமைப்பதன் நோக்கமாகும்.

மேலும், இலங்கை இயற்கை சான்றளிக்கப்பட்ட (SLS 1324) உற்பத்திகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட புவியியல் குறியீட்டு (PGI) சான்றளிக்கப்பட்ட இயற்கை இலங்கை கறுவா உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு இலங்கை மண்டபத்தில் சிறப்பு கண்காட்சி பகுதி ஒன்று ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

**யாருக்கானது**

பின்வரும் உற்பத்திப் பிரிவுகளின் கீழ் சர்வதேச சந்தைக்கு போதுமான வழங்கும் திறனுடன் சர்வதேச உணவுத் தரங்கள் (EU organic) மற்றும் Sri Lanka Organic (SLS 1324) இனை பின்பற்றும் சான்றளிக்கப்பட்ட இயற்கை விவசாய உற்பத்தி பதப்படுத்துநர்கள்/ ஏற்றுமதியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பதப்படுத்தப்பட்ட மற்றும் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகள் (உறையவைக்கப்பட்டவை, நீரகற்றிய மற்றும் பாதுகாக்கப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறிகள், பழச்சாறு, டின் செய்யப்பட்ட/ போத்தலில் அடைக்கப்பட்ட உற்பத்திகள்)
- தேங்காய் அடிப்படையிலான உற்பத்திகள் (உலர்ந்த தேங்காய், தேங்காய் பால், கிறீம், தூள் தேங்காய்/ இளநீர், சுவையூட்டப்பட்ட தேங்காய் சிப்ஸ் முதலியன)
- வாசனைச் சரக்கு பொருட்கள் மற்றும் வாசனைச் சரக்கு கலவைகள், வாசனைச் சரக்கு சுவையூட்டிகள், பரிசுத் தொகுப்புகளில் உள்ள வாசனைச் சரக்கு பொருட்கள், உணவு மூலப்பொருட்கள், துரித வாசனைச் சரக்கு தயாரிப்புகள் மற்றும் PGI சான்றளிக்கப்பட்ட இலங்கை கறுவா பொருட்கள்
- தேயிலை
- இனிப்புப் பொருட்கள் மற்றும் பேக்கரி பொருட்கள், சிறப்பு வசதியான உணவுப் பொருட்கள், தானியங்கள் மற்றும் தானிய அடிப்படையிலான பொருட்கள், ஆரோக்கிய உணவுப் பொருட்கள், உணவுச் சேர்க்கைப் பொருட்கள்
- பானங்கள் (மூலிகை தேநீர், மது அல்லாத பானங்கள், மூலிகைப் பானங்கள்)

**பங்கேற்புச் செலவு**

இடம் மற்றும் நிர்மாணச் செலவுகள் மற்றும் அனைத்து தொடர்புடைய செலவுகளையும் பங்கேற்கும் நிறுவனங்கள் ஏற்றல் வேண்டும். கிடைக்கப்பெறும் நிதிக்கு அமைவாக தேர்வு செய்யப்படும் SME நிறுவனங்களுக்கான இடம்/ நிர்மாணத்தின் செலவின் பகுதியை ஏற்று நிதி உதவி வழங்க EDB பரிசீலனை செய்யும்.

**விண்ணப்பம் மற்றும் தேர்வு**

விண்ணப்பங்களை www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் ("Announcements" பிரிவின் கீழ்) கிடைக்கப்பெறும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் மேற்கொள்ளல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "BIOFACH 2027" என்று குறிப்பிட்டு 2026 ஜூலை 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் - ஏற்றுமதி விவசாயம், EDB என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இந்த நிகழ்ச்சிக்காக பொருத்தமான பங்கேற்பாளர்களை தேர்வு செய்வதற்கு குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் EDB மூலம் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு, 011-2300732, 011-2300705-11- நீடிப்பு-390, மின்னஞ்சல்: jayani@edb.gov.lk செல்வி ஜயானி கலகெதர அவர்களை தொடர்புகொள்ளவும்.

---

**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**NDB-EDB கோபுரம், 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு - 02**
**இணையதளம்: www.srilankabusiness.com**